**அ.வ.எண். 260/2021**
**வா.சா.1 : மாரப்பன்**
**தேதி : 26.02.2026**

**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:—**

நான் விவசாயம் மற்றும் லேவாதேவியம் செய்து வருகிறேன். பிரதிவாதி இடம் வாங்கி விற்கும் தொழில் செய்கிறார். நீங்களும் பிரதிவாதியும் திருவேல்முருகன் பைனான்ஸ், திருவேல்முருகன் பைனான்சியர்ஸ், திருவேல்முருகன் கிரெடிட், திருவேல்முருகன் இன்வஸ்ட்மெண்ட் ஆகிய நிறுவனங்களில் பங்குதாரராக உள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன 4 நிறுவனங்களிலும் பிரதிவாதியும் கந்தசாமியும் நிர்வாக பங்குதாரர்களாக உள்ளார்கள். மேற்சொன்ன 4 நிறுவனங்களும் நஷ்டம் ஏற்பட்டதால் மேற்சொன்ன நிறுவனங்கள் அனைத்தும் 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் மூடிவிட்டார்கள் என்றால் சரிதான். உங்கள் மருமகன் ரமேஷ்—ம், பிரதிவாதியின் மாப்பிள்ளை அசோக்கும் அழகுமுருகன் பைனான்சில் பங்குதாரர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன 4 நிறுவனங்களில் நான் பங்குதாரர் என்பதால் நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் கடந்த 10 வருடங்களாக வருமானவரி செலுத்தி வருகிறேன். வழக்கில் கொடுக்கப்பட்ட கடனை வருமான வரிக்கணக்கில் காட்டியுள்ளீர்களா என்றால் சரிதான். மேற்படி வருமான வரிக்கணக்கில் வழக்கின் கடனை காட்டியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் 4, 5 வங்கிகளில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். பிரதிவாதிக்கு கொடுத்த கடன் தொகை எந்த வங்கியலிருந்து கடன் கொடுத்துள்ளீர்கள் என்றால் பிரதிவாதிக்கு நான் கையில் வைத்திருந்த பணத்தை தான் கடனாக கொடுத்துள்ளேன். பிரதிவாதிக்கு 20.07.2020 ஆம் தேதியன்று பணம் கொடுத்தேன். அதற்கு 10 நாட்களுக்கு முன்பு பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார். நான் இடம் விற்று இடம் வாங்குவதற்காக வீட்டில்

பணம் வைத்திருந்தேன். அந்த பணத்தை தான் பிரதிவாதி கேட்ட போது கடனாக கொடுத்தேன். நான் 2019 ஆம் ஆண்டில் காடு விற்றேன். பணம் வாங்குவதற்கு 2, 3 நாட்களுக்கு முன்பு பிரதிவாதியிடம் என்னிடம் பணம் உள்ளது என்று கூறினேன். எழுதியதும் சாட்சியுமாக கையொப்பம் போட பிரதிவாதி தான் ஆளை அழைத்து வந்தார். சாட்சியை நான் அழைத்து வந்தேன். 20.07.2020 ஆம் தேதி பணம் வாங்க பிரதிவாதி வருவதாக கூறினார். நான் 19.07.2020 ஆம் தேதியன்று இரவு சாட்சியை 20 ஆம் தேதி காலை வருமாறு அழைத்தேன். பிரதிவாதியும் மற்றும் செந்தில்சுப்புராயனும் முதலில் வந்தார்கள். பின்னர் கால்மணிநேரம் கழித்து விவேகானந்தன் வந்தார். என் வீட்டில் என் மனைவி தோட்டத்திற்கு சென்று விட்டார். வீட்டில் நான் மட்டும் தான் இருந்தேன். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு ஆவணத்தில் உள்ள வாசகங்களை நானும் பிரதிவாதியும் கூறினோம். என் வீட்டில் தான் வா.சா.ஆ.1 எழுதப்பட்டது. என் வீட்டில் ஹாலில் வைத்து எழுதப்பட்டது. கடனுறுதி சீட்டை பிரதிவாதி கொண்டு வந்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதி ஸ்டாம்ப் ஒட்டி கொண்டு வந்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாசகங்கள் ஒரு மையிலும் சாட்சியங்கள் வேறொரு மையிலும் உள்ளது என்றால் எழுதியவர் அவர் பேனாவில் எழுதினார் சாட்சி அவர் பேனாவில் கையொப்பம் செய்தார். நான் 500 ரூபாய் நோட்டுக்களாக பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். பிரதிவாதி பணத்தை சரிபார்த்து வாங்கிய பிறகு வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்தார். பிரதிவாதி சொன்ன தேதியில் சொன்ன மாதிரி பணம் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்களும் சாட்சி விவேகானந்தன், எழுதியதும் சாட்சியும் செந்தில்சுப்புராயன் ஆகியோர் கள்ளக்கூட்டு செய்து கொண்டு பிரதிவாதியை ஏமாற்ற வேண்டி வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் மாப்பிள்ளையும், உங்கள் மருமகனும் பங்குதாரராக உள்ள நிறுவனத்தில் பிரதிவாதி 2 லட்ச ரூபாய் கடன் வாங்கியுள்ளாரா என்றால்

வாங்கவில்லை. மேற்சொன்ன நிறுவனத்தில் பிரதிவாதி அதன்பிறகு பணத்தை கொடுத்து விட்டார் என்று சொன்னால் அவர் கடனே வாங்கவில்லை. தற்போது அழகுமுருகன் பைனான்ஸ் மூடிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கும் பிரதிவாதிக்கும் வரவு செலவு பிரச்சனை ஏற்கனவே ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த பிரச்சனையில் தான் உங்கள் மருமகனுக்கு கொடுத்த கடனுறுதி சீட்டை தவறாக இந்த வழக்கில் பயன்படுத்தியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கும் பிரதிவாதிக்கும் கடன் கொடுத்தவர் கடன் பெற்றவர் என்ற உறவுமுறை இல்லை எ்னறு சொன்னால்சரியல்ல. நீங்கள் 20 லட்சம் பணம் கொடுக்க தகுதியானவர் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி உங்களுக்கு எந்த பணமும் கொடுக்கவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றுசொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.02.26 18:02:37 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**அ.வ.எண். 260/2021**
**வா.சா.2 : செந்தில்சுப்புராயன்**
**தேதி : 26.02.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. வாதி சாட்சியம் சொல்ல அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதியும், பிரதிவாதியும் 4, 5 நிதி நிறுவனங்களில் பங்குதாரராக இருந்து வந்தார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதியின் மருமகன் ரமேஷ்–ம் பிரதிவாதியின் மாப்பிள்ளை அசோக்கும் அழகுமுருகன் பைனான்ஸ்சில் பங்குதாரர் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. வா.சா.அ.1 கடனுறுதி சீட்டை நான் தான் எழுதினேன். பிரதிவாதி தான் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு எழுத வேண்டும் என்று என்னை வரச்சொன்னார். வா.சா.ஆ.1 எழுதுவதற்கு ஒரு நாள் முன்பு என்னை அழைத்தார். நானும் பிரதிவாதியும் ஒன்றாக வாதி வீட்டிற்கு சென்றோம். வாதியின் வீட்டிற்கு நானும் பிரதிவாதியும் செல்லும்போது வாதியும், சாட்சி விவேகானந்தனும் அங்கு இருந்தார்கள். அப்போது வாதியின் வீட்டில் யாரும் இல்லை. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள வாசகங்களை வாதி பிரதிவாதி இருவரும் சொன்னார்கள் நான் எழுதினேன். வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் வாசகங்கள் வேறு வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் வா.சா.ஆ.1 எழுதியது நான், சாட்சி விவேகானந்தர் அவரது பேனாவில் விலாசம் எழுதியுள்ளார். நான் என்னுடைய விலாசத்தை அதற்கு கீழ் எழுதியுள்ளேன். பிரதிவாதி ஸ்டாம்ப் மேல் கையெழுத்து செய்துள்ளார். பிரதிவாதி கடனுறுதி சீட்டை கொண்டு வந்தார். வாதி எந்த வங்கியிலிருந்து பணத்தை எடுத்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது வாதி வீட்டிலிருந்த பணத்தை எடுத்துக்கொடுத்தார். வாதி பிரதிவாதிக்கு 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தார். வாதி, பிரதிவாதி, சாட்சி ஆகியோர் உறவினர்கள் என்றால் அல்ல

நண்பர்கள். நீங்கள் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிக்கு ஆதரவாக பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொன்ன தேதியில் வாதியின் வீட்டிற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.26 18:02:46 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.